

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | பிப்ரவரி 27, 2020 | புரட்சி 19 | முழக்கம் 07 | விலை: ரூ.3.00


## பேராவூரணி கூட்டத்தில் கொளத்தூர் மணி விளக்கம்

# தேசிய குடியுரிமை-மக்கள் பதிவேடுகள் அனைத்து தரப்பினருக்கும் ஆபத்தானவை

***தேசிய குடியுரிமை பதிவேடு, தேசிய மக்கள் பதிவேடு இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல, அனைத்துப் பிரிவினரையும் பாதிக்கும்; எளிய குடிமக்கள் தலையில் தங்களை நிரூபித்துக் கொள்ளும் சுமையை அழுத்துகிறது மத்திய அரசு என்றார் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி.***

***பிப். 17, 2020 அன்று பேராவூரணியில் நடந்த பொதுக் கூட்டத்தில் கொளத்தூர் மணி ஆற்றிய உரை:***

குடியுரிமை திருத்தச் சட்டத்தின் பாதிப்புகளை எனக்கு முன்னர் உரையாற்றிய பலரும் விளக்கி யிருக்கிறார்கள். குறிப்பிட்ட மதத்தினரை மட்டும் விலக்கி, குறிப்பிட்ட நாடுகளை உலகின் கொடூரமான நாடுகள் என்பதாக அடையாளப்படுத்துகிற ஒரு சட்டம்; அதிலும் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு முன்னால் வந்தவர்களுக்கு மட்டும் - 2014க்குப் பின் அந்த நாடுகளெல்லாம் எந்த கொடுமைகளையும் செய்வதில்லை; 2014உடன் நிறுத்திவிட்டார்கள் என்பதைப்போல - இந்த சட்டத்தை ஏன் கொண்டு வந்தார்கள் என்பது ஒருபுறமிருக்கட்டும்.

பல நேரங்களில் சங்கிகள் உண்மையைச் சொல்லி விடுவார்கள். அசாம் மாநிலத்தின் பாஜகவின் முன்னணித் தலைவரும், நிதி அமைச்சராகவும் இருக்கும் கிமாந்தா பிஸ்வாஸ் சர்மா, அசாமில் உள்ள ஜி-பிளஸ் என்ற தொலைக்காட்சிக்கு 2019 ஜனவரியில் பேட்டியளித்துள்ளார். ‘நாங்கள் பெரும் பான்மையான இடங்களில் 10.000 அளவிலான வாக்குகளில் தான் இழந்து கொண்டிருக்கிறோம் இப்போது நாங்கள் இங்கிருக்கும் இந்துக்கள் வாக்குகளையும் இழந்து விடுவோமேயானால், நாங்கள் கட்டாயமாக 17 தொகுதிகளை இழந்து விடுவோம். ஆனால், வரவுள்ள குடியுரிமைத் திருத்தச் சட்டத்தினால், குறைந்தது 17 தொகுதிகள் கட்டாயம் எங்களுக்கு எப்போதும் உறுதியாகிவிடும்’ என்று அந்த பேட்டியில் கூறுகிறார்.

ஏனென்றால் அசாமில்தான் இந்த சட்டம் முதன் முதலில் வேறு காரணத்திற்காக கொண்டு வரப் பட்டது. இன்றைக்கும் கூட அசாமில் 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி மக்கள்தொகை மூன்று கோடியே 15 இலட்சம். அதில் அசாம் மொழி பேசக்கூட அசாமியர்கள் 1 கோடியே 50 இலட்சம் பேர்தான். அவ்வளவு மக்கள் வங்க தேசத்திலிருந்து அண்டை நாடான இந்தியாவில், அசாமில் நுழைந் திருக்கிறார்கள். அவர்கள் மொத்த வங்காளிகளையும் சேர்த்துத்தான் சொல்கிறார்கள். அசாமிலிருக்கிற மொத்த உயர் பதவிகளையும், வணிகத்தையும் அவர்கள்தான் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். தங்களுடைய பண்பாடு, மொழி சிதைந்து விடும் என்ற அச்சத்தாலும், தங்கள் வாழ்வுரிமையே மறுக்கப்படலாம் என்ற அச்சத்தினால்தான் அசாம் மக்கள் இங்கு வந்து குடியேறியவர்களை வெளி யேற்றுங்கள் என்று போராடத் தொடங்கினார்கள். அதற்காக பலமுறை பேசப்பட்டு அதற்காக 1985இல் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டு சில சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. அதற்கு முன் 1987 வரை இந்த நாட்டில் பிறந்தவர்கள் அனைவரும் இந்தியாவின் குடிமக்கள் என்று சட்டம் சொல்லி வந்தது. நான்கு வழிகளில் அதை சொன்னார்கள்; ஒன்று இங்கே பிறந்தவர்களுக்கு, இரண்டு பெற்றோர் வழி வந்தவர்களுக்கு, தொடர்ந்து இங்கு வாழ்ந்து வந்தவர்களுக்கு இயல்புரிமை (Naturalisation) என்ற அடிப்படையில், இந்தியா தம்மோடு இணைத்துக் கொண்ட நாடுகளைச் சேர்ந்தவர்களும் இந்திய குடிமக்கள், இவ்வளவு தான் சட்டம்.

1987 ஆம் ஆண்டுதான் அசாம் மக்களோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் காரணமாக, ஒரு திருத்தத்தைக் கொண்டு வருகிறார்கள், ‘பெற்றோரில் ஒருவர் இந்தியராக இருக்க வேண்டும்; இல்லை யென்றால் குடியுரிமை இல்லை’ என்பது தான் அந்த சட்டத் திருத்தம். அதில் ஒரு நியாயம் இருந்தது.

சில பேரை நல்லவர்கள் என்று கூறுவார்கள், பாம்பில்கூட நல்ல பாம்பு உண்டல்லவா? அப்படி பாஜகவில் இருந்த நல்லவர் வாஜ்பாய் . அப்படித்தான் அவரைக் கூறுவார்கள். 2003 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த அவர் அமெரிக்காவில் உள்ள சிலேட்டன் தீவிற்குச் சென்றார். அங்கு அதிகம் இருப்பது பார்ப்பன பனியாக்கள் தான்; எளிமையாக கூறினால் இந்துத்துவவாதிகள். அவர்கள் வாஜ்பாயிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்கள், “நீங்கள் ஆட்சிக்கு வந்தது 1999 இல் 2004 இல் ஆட்சி முடியப் போகிறது; இன்னும் இந்துத்துவ அஜெண்டா எதையும் நிறைவேற்றவில்லையே?” என்று கேட்கிறார்கள்.



**இந்த தேசிய மக்கள் பதிவேடும், இந்தியக் குடியுரிமைப் பதிவேடும் இஸ்லாமியருக்கு மட்டும் எதிரானதா? இல்லை, அனைத்துத் தரப்பினருக்கும் எதிரானது.**

அதற்கு வாஜ்பாய் கூறுகிறார், “இப்போது மற்ற கட்சிகளின் ஆதரவோடு நாங்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம்; எங்களுக்குத் தனிப் பெரும்பான்மை கிடைக்குமேயானால் இத்தனை ஆண்டுகள் பொறுத்திருக்க மாட்டோம்; சில மாதங்களிலேயே நிறைவேற்றியிருப்போம்” என்று அப்போது 2003இல் கூறினார். தற்போது 2019இல் அறுதிப் பெரும்பான்மை கிடைத்திருக்கிறது. அதனால்தான் அவர்கள் வேகவேகமாக செய்யத் தொடங்கி யிருக்கிறார்கள். வாஜ்பாயி ஆட்சியில் இருந்தபோது 2003இல்தான் குடியுரிமைச் சட்டத்தில் மேலும் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார், ‘பெற்றோர்களில் ஒருவர் இந்தியராக இருக்க வேண்டும் என்பதோடு மற்றொருவரும் சட்ட விரோதமாகக் குடியேறிய வராக இருக்க கூடாது’ என்பதே அந்தத் திருத்தம். அதோடு இணைந்து தேசிய மக்கள் பதிவேடும், குடிமக்கள் பதிவேடும் உருவாக்கப்பட்டன. அதுதான் இப்போதுவரை நடைமுறையில் இருக்கிறது.

எனவே, 1987க்கும் 2003க்கும் இடையில் பிறந்த வர்கள், அவர்கள் இஸ்லாமியராக மட்டுமில்லை, இந்துவாக, கிறித்துவராக, சீக்கியராக யாராக இருந்தாலும் தங்கள் பெற்றோரில் ஒருவர் இந்தியாவில் பிறந்தவர் என்பதை நிரூபித்தாக வேண்டும்; 2004க்கும் பின்னர் பிறந்தவர்கள் தங்களின் தாய், தந்தை இருவரும் பற்றிய ஆவணங்களைக் காட்டி நிரூபித்தாக வேண்டும். அப்படியெனில் இந்த தேசிய மக்கள் பதிவேடும், இந்தியக் குடியுரிமைப் பதிவேடும் இஸ்லாமியருக்கு மட்டும் எதிரானதா? இல்லை, அனைத்துத் தரப்பினருக்கும் எதிரானது. சட்டவிரோதக் குடியேறிகளை அரசாங்கம் தனது துறைகளின் வழியாக செய்ய வேண்டிய ஒன்றை எளிய குடிமக்கள் தலையில் சுமத்தப் பார்க்கிறது. ஒரு ஊரில் திருட்டு ஒன்று நடந்தால், காவல் துறை, உளவுத் துறையினர் கண்டுபிடிப்பதா? அல்லது எல்லா மக்களும் தாங்கள் திருடவில்லை என்பதை நிரூபியுங்கள் என்று மக்களை அலைக்கழிப்பதா? என்று எழுப்பப்படும் கேள்விகள் எவ்வளவு சரியானது என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

எதற்கெடுத்தாலும் முன்னால் இருந்த ஆட்சியை இவர்கள் காரணம் காட்டிச் சொல்வார்கள். காங்கிரஸ்தான் தேசிய மக்கள் பதிவேட்டுக் கணக்கெடுத்தது; காங்கிரஸ்தான் குடிமக்கள் பதிவேட்டில் கணக்கெடுத்தது என்று. ஒரு பகுதி உண்மைதான்; காங்கிரஸ்தான் கணக்கெடுத்தது. ஆனால் ஒட்டுமொத்த இந்தியர்களையும் கணக்கெடுக்கவில்லை. 2004இல் எல்லையோரத்தில் இருக்கிற மக்களுக்குக் குடியுரிமை பதிவேடு செய்தார்கள். எல்லையோரத்தில் இருக்கிறவர்கள் இந்த நாட்டுக்காரரர்களா? இந்தியர்களா? என்று தெரியாது என்பதற்காக. மும்பையில் தாக்குதல் நடந்த பின்னால் 2009இல் கடலோரங்களில் இருந்தவர் களுக்கும் குடியுரிமைப் பதிவு செய்தார்கள். மொத்தம் 0.65% மக்களுக்கு மட்டும் தான் காங்கிரஸ் பதிவேடு செய்தது. அதற்குக் காரணம் இருந்தது.

### பாகிஸ்தான் பிரிவினை: யார் காரணம்?

இப்போதும் சங்கிகள் சொல்கிறார்கள் பாகிஸ்தானைப் பிரித்துத்தான் பகைமையை உண்டாக்கிவிட்டது காங்கிரசு என்று. பாகிஸ்தானைக் காங்கிரசா பிரித்தது? பாரதிய ஜனதா கட்சிக்கு முன்னர் ஜனசங்கம்; அதற்கு முன்னால் ஆர்.எஸ்.எஸ்; அதற்கும் முன்னால் இருந்த இந்து மகாசபை அவர்கள் தான் தொடர்ந்து சொல்லிக் கொண்டே வந்தார்கள். “இரண்டு பகைமை கொண்ட தேசங்கள் அருகருகே வாழ்ந்து கொண்டிருக்கின்றன; ஒன்று இந்துக்கள் தேசம், மற்றொன்று முஸ்லிம்கள் தேசம்; இரண்டும் ஒரே தேசமாக முடியாது” என அகமதாபாத்தில் 1937இல் நடந்த இந்து மகாசபைக் கூட்டத்தில் சாவர்க்கர் பேசினார். 1923இல் வெளியிட்ட இந்துத்துவ பேரறிக்கையிலும் (Hindutva Manifesto) இதே கருத்தை ஏற்கனவே குறிப்பிட் டிருந்தார். ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கு தத்துவத்தை வகுத்தளித்த அதன் நீண்டகாலத் தலைவர் கோல்வாக்கர், 1938இல் எழுதிய தனது ‘நாம் அல்லது நமது தேசத்தின் வரையறை’ என்ற நூலில் “இந்து அல்லாதவர்கள் இந்துக் கலாச்சாரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்; இந்து தேசத்துக்கு அடிமைப் பட்டவராக (sub-ordinated) எதையும் கோராதவர் களாக, எந்த சிறப்புரிமையும் இல்லாதவர்களாக, குடியுரிமையைக்கூட எதிர்பார்க்காதவர்களாக, (not even citizen’s rights) இருக்கவேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

யார் பிரிவினையைக் கொண்டுவந்ததாகக் கூறு கிறார்கள். ஜின்னா 1940களில் பாகிஸ்தான் பிரிவினை குறித்துப் பேசத் தொடங்கினார்; 1940 மார்ச்சில்தான் முஸ்லிம் லீக் தலைமைக் குழு பாகிஸ்தான் கேட்டுத் தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் இவர்களெல் லாம் 1908லியே ஆரம்பித்துவிட்டார்கள். பாய் பரமானந்தா என்ற ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர், கோல்வாக்கர், சாவர்க்கர் என இவர்களெல்லாம் சொல்லிக் கொண்டே வந்தார்கள். இவர்கள் சொல் கிறார்கள் 2014 டிசம்பர் 31 வரை ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வங்க தேசம் ஆகிய நாடுகளில் இருந்த வந்தவர்களுக்கு குடியுரிமை உண்டு என்று. அவ்வாறு வந்தவர்கள் வெறும் 31,313 பேர்தான். இவ்வளவு குறைந்த பேருக்கா நாடாளுமன்றத்தைக் கூட்டி திருத்தச் சட்டத்தை கொண்டு வருவார்கள்? இல்லை. அசாமில் சட்டம் கொண்டு வரப்பட்டு கணக்கெடுக்கப்பட்டு குடியுரிமை அற்றவர்கள் என அறிவிக்கப்பட்டவர்கள் 40 இலட்சம் பேர். இந்தக் கணக்கெடுப்பின் யோக்கியதையை நாம் பார்க்க வேண்டும் 2018 கணக்கெடுப்பின்படி சட்டவிரோதக் குடியேறிகள் 40 இலட்சம்; மீண்டுமொருமுறை கணக்கெடுங்கள் என்றார்கள். இரண்டாவதாக கணக்கெடுத்தால் 19 இலட்சம் என்று கூறுகிறார்கள். 19 இலட்சத்தில் 12 இலட்சம் பேர் இந்துக்கள். இப்போது பிஸ்வாஸ் சர்மா என்ற பா.ஜ.க. நிதியமைச்சர் 2019 ஜனவரியிலேயே அளித்திருந்த தொலைக்காட்சிப் பேட்டியைப் பொருத்திப் பாருங்கள். அந்த 12 இலட்சம் பேருக்குக் குடியுரிமை கொடுக்க வேண்டும், அது தான் அவர்களின் நோக்கம். எனவே திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள்.

சரி இப்போது நாம் இஸ்லாமியர்களுக்கு இந்த சட்டம் ஆபத்து என்று சொல்லிக் கொண்டிருக் கிறோம். ஏனென்றால் பாஜக இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல, இந்து மதத்தவர் என்று சொல்லப் படுகின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்த பட்ட சூத்திரர்கள் என்போருக்கும், நாத்திகர் களுக்கும்கூட எதிராகத்தான் செயல்பட்டுக் கொண் டிருக்கிறது. கோலம் போட்டால் கூட கைது செய்கிறார்கள். வட மாநிலங்களில் அல்ல; இங்கே பழனிச்சாமிஜி ஆட்சியிலும். இந்நிலையில் தேசிய மக்கள், குடியுரிமைப் பதிவேடுகளால் நாம் எப்படி பாதிப்படையப் போகிறோம் என்பன பற்றி மட்டும் சிலவற்றை கூறிவிடுகிறேன். குடியுரிமைத் திருத்தச் சட்டம் பற்றியல்ல, நான் கூறுவது தேசிய மக்கள் பதிவேடு சட்டம் பற்றி. நமக்கு மக்கள் பதிவேட் டிற்குத் தனியாக சட்டம் வேண்டுமா? பதிவேடு எடுக்க வேண்டுமா என்றால், பத்தாண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகைக் கணக்கெடுப்பு (census) நடந்து கொண்டுதான் இருக்கிறது. அனைத்து மக்களைப் பற்றிய பதிவும் இருக்கிறது. பின் எதற்கு மற்றொரு பதிவு? தேவையில்லையே! ஆனால் ஏன் எடுக் கிறார்கள்?

**(தொடரும்)**

# குடியுரிமைச் சட்டங்களால் ஆபத்துகள் இல்லையா?

குடியுரிமைச் சட்டங்களைக் கொண்டு வருவதன் நோக்கத்தை சங்கிகளே இப்போது வெளிப்படையாகப் பேசத் தொடங்கி விட்டார்கள்.

கிரிராஜ் சிங் என்ற மத்திய அமைச்சர், குடியுரிமை திருத்தச் சட்டத்தை ஆதரித்து பீகாரின் வடகிழக்குப் பகுதியில் பரப்புரை செய்தபோது, “1947க்கு முன்பு ஜின்னா பாகிஸ்தான் நாடு கோரியபோதே இங்கிருந்து முஸ்லிம்களை பாகிஸ்தானுக்கும் அங்குள்ள இந்துக்களை இந்தியாவுக்கும் அனுப்பி வைத்திருந்தால் இப்போது குடியுரிமை திருத்தச் சட்டம் கொண்டு வர வேண்டிய தேவையே இருந்திருக்காது” என்று பேசியிருக்கிறார். இதற்கு பா.ஜ.க. அமைச்சரவையிலேயே இடம் பெற்றுள்ள ராம் விலாஸ் பஸ்வானின் லோக் ஜனசக்தி கட்சித் தலைவர் சிரங் பஸ்வான் (பஸ்வானின் மகன்), பீகாரில் பா.ஜ.க. கூட்டணி கட்சியான நிதிஷ்குமார், கூட்டணி ஆட்சியில் இடம் பெற்றுள்ள இந்துஸ்தானி சுவான் மோட்சா (மதச் சார்பின்மை) கட்சியின் தலைவர் கண்டனம் தெவித்திருப்பதோடு, கிரிராஜ் சிங் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். குடியுரிமை திருத்தச் சட்டத்தின் நோக்கமே இந்தியாவை இந்து ராஷ்டிரமாக்குவது தான் என்ற உண்மை இப்போது வெளியே வந்துவிட்டது.

உ.பி. முதல்வராக உள்ள ஆதித்ய நாத் என்ற இந்துமத வெறியர் உ.பி.யில் நடக்கும் குடியுரிமை திருத்தச் சட்டங்களைக் கொடூரமாக ஒடுக்கி வருகிறார். துப்பாக்கி சூட்டில் இதுவரை 23 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவ்வளவு பேரும் இஸ்லாமியர்கள். இது பற்றி சட்டமன்றத்தில் முதலமைச்சர் பேசிய பேச்சு – திமிர் – கொழுப்பு – ஆணவத்தின் உச்சம். “இவர்களை உ.பி. காவல்துறை சுடவில்லை; அவர்கள் சாவதற்காகவே போராட்டத்துக்கு வந்தவர்கள்; எனவே சாகத்தான் செய்வார்கள்; எங்கள் காவல்துறை துப்பாக்கியிலிருந்து ஒரு குண்டுகூட வெடிக்கவில்லை. போராட்டக்காரர்களே ஒருவரையொருவர் சுட்டுக் கொண்டார்கள்” என்று திமிருடன் பேசியிருக்கிறார்.

- குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக மாநிலங்களவையில் நாடாளுமன்றத்தில் ஓட்டளித்தது. அ.தி.மு.க. குடியுரிமை திருத்தச் சட்டத்தால் இந்தியாவில் வாழும் எவருக்காவது பாதிப்பு உண்டா என்று சட்டசபையில் சவால் விட்டார் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி. எதிர்க்கட்சிகள் தவறான பிரச்சாரம் செய்வதாகவும், முதல்வர் உள்ளிட்ட அ.இ.அ.தி.மு.க. அமைச்சர்கள் பேசி வருகிறார்கள். தேசிய குடியுரிமைப் பதிவேடு தயாரிப்பதற்கான முதல் கட்ட பணியான தேசிய மக்கள் தொகைப் பதிவேடு தயாரிக்கும் வேலைகளையும் தமிழக அரசு தொடங்கும் என்று அறிவித்து விட்டார்கள். இவ்வளவுக்குப் பிறகும் தேசிய குடிமக்கள் பதிவேட்டில் புதிய கேள்விகள் ஏன் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்றும் இதற்கான விளக்கம் தேவை என்றும் மத்திய அரசுக்கு தமிழக அரசு கடிதம் எழுதியுள்ளதாக அமைச்சர் உதயகுமார் சட்டப் பேரவையில் தெரிவித்திருக்கிறார்.
- குடியிருப்போர் தாய்மொழி, ஆதார் அடையாள அட்டை எண், அலைபேசி எண், வாக்காளர் அடையாள அட்டை, ஓட்டுநர் உரிமம், பெற்றோர்களின் பிறந்த தேதி, ஊர் ஆகிய விவரங்கள் மக்கள் தொகைப் பதிவேட்டில் ஏன் கேட்கப்பட வேண்டும் என்ற கேள்வியை தமிழக அரசே எழுப்பியிருக்கிறது. மேற் குறிப்பிட்ட விவரங்களை உரிய ஆவணங்களோடு தராவிட்டால் குடியுரிமைப் பதிவேடு மறுக்கப்பட்டு, இந்தியக் குடிமக்கள் என்ற உரிமை மறுக்கப்பட்டு, நாடற்றவர் ஆக்கப்படும் ஆபத்து இருக்கிறது. இந்த முடிவுகளை எடுக்கும் அதிகாரம் ஒரு அரசு ஊழியருக்கே தரப்பட்டுள்ளது. பா.ஜ.க.வை எதிர்க்கும் முதுகெலும்பு இல்லாத தமிழக அரசே இந்த ஆபத்துகளை வெளிப்படுத்தும் கட்டாயத்துக்கு தள்ளப்பட்டிருக்கிறது என்பதிலிருந்து சட்டத்தின் கொடூரத்தைப் புரிந்து கொள்ளலாம்.
- குடியுரிமை திருத்தச் சட்டத்தால் இந்தியாவில் ஒருவருக்காவது ஆபத்து உண்டு என்று கூற முடியுமா என்று மத்திய அரசும் தமிழக அரசின் அமைச்சர்களும் சவால் விடுகிறார்கள். அய்தராபாத்திலிருந்தும் பெங்களூரிலிருந்தும் வந்துள்ள இரண்டு செய்திகளை கவனத்துக்குக் கொண்டு வருகிறோம். பிப்.19, 2020 ஆங்கில ‘இந்து’ ஏடு (சென்னைப் பதிப்பு) வெளியிட்டள்ள செய்தி இது:

  “அய்தராபாத்திலுள்ள ஆதார் அடையாள அட்டை வழங்கும் அமைப்பு (UIDAI) பழைய அய்தராபாத் பகுதியில் 127 பேருக்கு ஆதார் உரிமத்தை இரத்து செய்து நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது. தவறான தகவல்களைத் தந்து ஆதார் உரிமத்தைப் பெற்றுள்ளதாக எங்களுக்கு புகார் வந்துள்ளது. எனவே இந்தியக் ‘குடிமகன்’ என்பதை நிரூபிக்கும் ஆவணங்களோடு எங்களை வந்து சந்திக்க வேண்டும்” என்று ஆதார் நிறுவனத்தின் துணை இயக்குனரான அமிதாபின்ட்ரு என்பவர் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். நோட்டீஸ் அனுப்பப்பட்டவர்களில் ஒருவர் முகம்மது சர்தார்கான். தச்சுத் தொழிலாளி; பவானி நகர் குடியிருப்பில் வாழ்கிறார். அய்தராபாத்திலே பிறந்து வளர்ந்தவர். பெற்றோரும் அய்தராபாத்திலே பிறந்தவர்கள். தந்தை அய்தராபாத் ஆல்வின் நிறுவனத்தில் பணியாற்றுகிறார். முதல்கட்டமாக 127 பேருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. பாதிக்கப் பட்டவர்களுக்காக வாதாட வழக்கறிஞர்கள் ஆர்வத்துடன் முன் வந்துள்ளனர். ஆதார் நிறுவன அதிகாரிகளுக்கு குடியுரிமை ஆவணங்களைக் கேட்கும் உரிமையே கிடையாது. குடியுரிமை சட்டங்கள் வர இருப்பதால் தாங்களே அதிகாரத்தை முறைகேடாகக் கைகளில் எடுத்துக் கொண்டு செயல் படுகிறார்கள் என்று வழக்கறிஞர்கள் குற்றம்சாட்டுகிறார்கள். நோட்டீஸ் அனுப்பப்பட்ட 127 பேரில் பெரும்பாலோர் இஸ்லாமியர்; ஏனையோர் தலித் மக்கள்.

  பெங்களூர் புறநகர்ப் பகுதியில் குடிசைப் பகுதியில் வாழ்ந்த 300 இசுலாமியர்கள் சட்ட விரோதமாகக் குடியேறியவர்கள்; அவர்களிடம் உரிய ஆவணங்கள் இல்லை என்று பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் புகார் தரவே, பா.ஜ.க. அரசின் காவல்துறை அவர்களின் குடிசைகளை அகற்றி வெளியேற்றி விட்டது என்ற செய்தியையும் ‘இந்து’ நாளேடு வெளியிட்டிருக்கிறது.
- அமெரிக்காவில் இயங்கும் மத சுதந்திருத்துக்கான சர்வதேச ஆணையம், அய்.நா.வின் பொதுச் செயலாளர் அன்டோனியோ கட்டெரஸ், அய்ரோப்பிய நாடுகளுக்கான நாடாளுமன்றம், உள்ளிட்ட பல்வேறு சர்வதேச அமைப்புகள், இந்தியாவின் மதச்சார்பின்மை சிதைக்கப்பட்டு, மைனாரிட்டி மக்களுக்கு ஆபத்துகள் உருவாக்கப்படுவதை சுட்டிக்காட்டி எச்சரிக்கின்றன.
- இந்தியாவில் இராணுவ ஆட்சியை அமுல்படுத்திவிட்டு, மக்களின் நன்மைக்காகவே இராணுவ ஆட்சி வந்துள்ளது, இதனால் யாருக்கும் ஆபத்து இல்லை என்று கூறினால் எப்படி அதை ஏற்க முடியும்? அதேபோல்தான் பா.ஜ.க. ஆட்சியும் இப்போது இந்த குடியுரிமை திருத்தச் சட்டங்கள் பற்றிப் பேசுகிறது. இதன் ஆபத்துகள் அமுலாக்கப்படும்போதுதான் ஆபத்துகளை உணர முடியும்.

# 27 சதவீத இடஒதுக்கீட்டை ஒழிக்கும் ஆபத்து

‘உயர்ஜாதி ஏழைகள்’ என்ற பிரிவுக்கு 10 சதவித இடஒதுக்கீடு செய்த பார்ப்பன பா.ஜ.க. ஆடசி இப்போது ‘உயர்ஜாதி’ ஏழைகளுக்கு பிற்படுத்தப்பட்டோருக்கு வழங்கும் வயது வரம்பு சலுகைகளை வழங்க ஆலோசித்து வருகிறதாம். உரிய விண்ணப்பதாரர்கள் இல்லாத பிரிவினருக்குத்தான் வயது வரம்பு சலுகை தேவைப்படுகிறது. ஆனால் ஆதிக்கவாதிகளாக பார்ப்பன உயர் ஜாதியினருக்கு வயது வரம்பு சலுகைகளை வழங்கி ‘கட்ஆப் மதிப்பெண்’ பட்டியல் இனப் பிரிவினரை விட குறைந்து இருந்தாலும், கல்வி, வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்க கதவு திறந்து விடப் போகிறார்கள்.

அதேபோல் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீட்டில் மத்திய அரசுப் பதவிகளில் பாதியளவுகூட இன்னும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் பெற்றோர் அரசு ஊழியர்களாக இருந்தால் அவர்கள் மாத வருமானத்தை கிரிமிலேயர் வரம்புக்குள் கொண்டு வருவது குறித்து ஆலோசித்து வருகிறார்களாம். அரசு ஊழியர், பொதுத் துறை ஊழியர் மாத வருமானம், விவசாய வருமானம் 1993ஆம் ஆண்டிலிருந்து ‘கிரிமிலேயர்’ பட்டியலில் சேர்க்கப்படவில்லை. இனி தாய், தந்தை மத்திய அரசுப் பதவியில் இருந்தால் அவர்கள் வீட்டுப் பிள்ளைகள் 27 சதவித இடஒதுக்கீட்டில் உரிமை கோர முடியாத நிலை வந்துவிடும்.

ஏற்கனவே பாதியளவுகூட இடஒதுக்கீடு பூர்த்தி செய்யப்படாத நிலையில் ஏன் மீண்டும் பிற்படுத்தப்பட்டோரை ‘வடிகட்டி’ அவர்களின் வாய்ப்புகளைத் தடை செய்ய வேண்டும்? மோடி பிற்படுத்தப்பட்டவர் என்கிறார்கள். பிற்படுத்தப்பட்டவர் ஆட்சி - ஏன் பார்ப்பனியத்துக்கு பல்லக்கு தூக்குகிறது? ஏன் - பிற்படுத்தப்பட்டோர் உரிமைகளை தடுத்து மீண்டும் குலத் தொழிலுக்கு திருப்பி விடுகிறது?

பிற்படுத்தப்பட்டோரும் இவர்கள் பார்வையில் ‘இந்து’க்கள்தானே? அவர்களை ஏன் வஞ்சிக்க வேண்டும்? ‘பார்ப்பன - உயர்ஜாதி’ மட்டும் தான் ‘இந்து’, ஏனைய ‘இந்து’ அவர்களுக்கு அடங்கிப் போக வேண்டிய அடிமை இந்து என்று பார்ப்பன மனுதர்ம சிந்தனைதான் பா.ஜ.க. பேசம் ‘இந்து’ அரசியலா?


## லிங்காயத்து மடத்துக்கு இஸ்லாமியர் தலைவரானார்

முஸ்லீம்களை அன்னியர்களாக்கி வெறுப்பு அரசியலை ஒவ்வொரு நாளும் சங்கிகள் பார்ப்பனர்கள் அரங்கேற்றிக் கொண்டேயிருக்கிறார்கள். இந்தச் சூழலில் கருநாடகாவில் ‘லிங்காயத்து’ மடம் ஒரு இளம் இஸ்லாமியரை தனது தலைவராக்கியுள்ளது.

லிங்காயத்து என்ற பிரிவை 12ஆம் நூற்றாண்டில் உருவாக்கியவர் பசவா என்று அழைக்கப்படும் பசவண்ணா, மிகச் சிறந்த கவிஞர்; தத்துவவாதி; பார்ப்பனியத்தை சுட்டெரிக்கும் கவிதைகளால் சாடியவர். அவர் உருவாக்கிய மார்க்கத்தில் உறுப்பினர்களானவர்களுக்கு ஜாதி அடையாளம் கிடையாது. ‘இந்து’ என்ற அடையாளமும் கிடையாது. பசவண்ணாவின் ஜாதி எதிர்ப்பு முற்போக்கு தத்துவத்தை ஏற்றுக் கொண்ட எந்த மதத்தவரும் தலைவராகலாம். இப்போது பசவண்ணா தத்துவத்தை ஆழமாகப் படித்து அதை ஏற்றுக் கொண்ட ஹரியஃப்முல்லா என்ற இஸ்லாமிய இளைஞர், மடத்தின் தலைவராகியுள்ளார். பசவண்ணா உள்ளூர் மன்னரின் அரசவையில் நிதி மேலாண்மை செய்யும் உயர் அதிகாரப் பதவியில் இருந்தவர். அரசருக்கு பசவண்ணாவின் சீர்திருத்தக் கருத்துகளில் உடன்பாடு இல்லை. ஒரு முறை தாழ்த்தப்பட்ட சமுதாய இளைஞனுக்கும், பார்ப்பனப் பெண்ணுக்குமிடையே பசவண்ணா ஜாதி மறுப்பு திருமணம் செய்ய முன் வந்தபோது அதற்கு கடும் எதிர்ப்பு உருவாகி கலவரமாக வெடித்தது. மன்னரின் ஆலோசகர் பதவியிலிருந்து விலகினார். தங்களை இந்து மதப் பிரிவில் சேர்க்கக் கூடாது என்பது லிங்காயத்துகளின் நீண்ட நாள் கோரிக்கை. கருநாடகத்தில் ஜனதா தளம் (மதச் சார்பின்மை), காங்கிரஸ் கூட்டணி ஆட்சி, லிங்காயத்துகளை தனி மதமாக அங்கீகரித்தது. ஆனால் மத்தியில் பா.ஜ.க. ஆட்சி இதற்கு ஒப்புதல் தர மறுத்து விட்டது.

இந்து மதம் எங்களுக்கு வேண்டாம் என்று ஒரு சமூகமே தனி மார்க்கமாக செயல்பட முன் வந்தாலும் அதை ஏற்க மறுக்கிறது பார்ப்பனியம். இந்து மதம் சகிப்புத் தன்மை கொண்டது என்று இவர்கள் பேசுவது மோசடி என்பதற்கு இதைவிட சான்று வேண்டுமா? இஸ்லாமிய வெறுப்பை பார்ப்பனர்கள் கக்கி வரும் சூழலில் லிங்காயத்து மடம் இஸ்லாமியரை அதன் தலைவராக்கி யிருப்பது பாராட்டி வரவேற்கப்பட வேண்டிய முற்போக்கான நடவடிக்கை.

## திருப்பூரில் குடியுரிமை திருத்தச் சட்டப் போராட்டம்: கொளத்தூர் மணி பங்கேற்பு




CAA - NRC- NPR -க்கு எதிரான தொடர் மக்கள் தர்ணா போராட்டத்தில் 22.02.2020 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்று சிறப்புரை யாற்றினார். திருப்பூர் இளைஞர்களின் கூட்டமைப்பு, குடியுரிமை பாதுகாப்பு கூட்டமைப்பின் சார்பில் திருப்பூர் காங்கேயம் ரோடு CTC டிப்போ பின்புறம் உள்ள அறிவொளி சாலையில் பாஜக மோடிஅரசால் மதரீதியாக மக்களை பிளவுபடுத்தும் குடியுரிமை திருத்தச் சட்டத்தையும், NRC, NPR-ஐயும் திரும்பப் பெற வலியுறுத்தி தொடர்ந்து நடந்து வரும் தொடர் மக்கள் தர்ணா போராட்டத்தின் 7 ஆவது நாளான 21.02.202 அன்று மாலை 6.00 மணிக்கு கழகத் தலைவர் CAA - NRC- NPR இன் அபாயம் குறித்து சிறப்புரையாற்றினார். இப்போராட்டத்தில் ஆயிரக் கணக்கான இசுலாமிய சகோதரர்களும், சகோதரிகளும், குழந்தைகளுடன் பங்கேற்று போராடி வருகிறார்கள்.

கழகத் தலைவருடன் கழகப் பொருளாளர் துரைசாமி, மாவட்டத்த லைவர் முகில்ராசு, இணைய தள பொறுப்பாளர் விஜய குமார், முகநூல் பொறுப்பாளர் பரிமளராசன், கழக நிர்வாகிகள் அகிலன், தனபால், சங்கீதா, மாதவன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

திராவிடர் விடுதலைக் கழகத்தின் வெளியீடான ‘இந்திய நாட்டினருக்கும் எதிரானதுதான் குடியுரிமை திருத்தச் சட்டம்’ - கொளத்தூர் மணி, ‘குடியுரிமைச் சட்டங்களை ஏன் எதிர்க்கிறோம் ?’ விடுதலை ராசேந்திரன் ஆகிய இந்த இரண்டு நூல்கள் இந்த போராட்டக்களத்தில் போராட்ட குழுவினரால் அறிமுகம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. மேலும், இந்திய விடுதலைப் போராட்டத்தில் முஸ்லீம்களின் பங்கு எனும் நூலை கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு திருப்பூர் ஷாஹின் பாஃக் போராட்ட குழுவினர் வழங்கினர்.

# 7 தமிழர் விடுதலை: மாநில அரசு அழுத்தம் தராதது ஏன்? – நீதிபதி து. அரிபரந்தாமன்

*7 தமிழர் விடுதலைக்கு தமிழக அமைச்சரவை அனுப்பிய பரிந்துரையை ஆளுநர் நீண்ட காலம் கிடப்பில் போட்டு வைத்திருக்க முடியாது என்று கருத்து கூறிய உச்சநீதிமன்றம், இது குறித்து ஆளுநரின் கருத்து என்ன என்பதைக் கேட்டு நீதி மன்றத்துக்கு அறிக்கைத் தர உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையில் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி து. அரிபரந்தாமன், இது குறித்து எழுதியுள்ள கட்டுரை.*

அரசமைப்புச் சட்டக் கூறு 161 வழங்கும் இறையாண்மை அதிகாரத்தின்படி, தமிழ்நாடு அரசின் அமைச்சரவை செப்டம்பர் 9, 2018 அன்று ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சுமார் 29 ஆண்டுகளாகச் சிறையில் இருக்கும் 7 தமிழர்களை விடுதலைசெய்வது எனத் தீர்மானத்தை நிறைவேற்றி, அதற்கான பரிந்துரையை உடனே ஆளுநருக்கு அனுப்பியது. ஆனால், அமைச்சரவைத் தீர்மானத்தையொட்டி ஆளுநர் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை.

அமைச்சரவைத் தீர்மானத்துக்குப் பின் எழுவரையும் விடுதலை செய்யாதது சட்ட விரோதம் என்றும், எனவே உடனே விடுதலை செய்து உத்தர விடுமாறும் எழுவரில் ஒருவரான நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்செய்தார். அந்த வழக்கில், மத்திய அரசு பதிலுரை தாக்கல் செய்துள்ளது. அதில், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று சிறையில் இருக்கும் 7 தமிழர்களை நளினி, முருகன், பேரறிவாளன், சாந்தன், ராபர்ட் பயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன் விடுவிக்கும் அதிகாரம் ஆளுநரிடம் தான் உள்ளது என்று கூறியுள்ளது. மத்திய அரசின் இந்த நிலைப்பாடு, அரசமைப்புச் சட்டக் கூறு பிரிவு 161-க்கும், உச்சநீதிமன்றத்தின் பல தீர்ப்புகளுக்கும், இந்த எழுவரில் நால்வரின் கருணை மனு சம்பந்தப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் நவம்பர் 25, 1999 அன்று வழங்கிய தீர்ப்புக்கும் முற்றிலும் விரோதமானது.

பிப்ரவரி 19, 2014 அன்று அப்போதைய முதல்வர் ஜெயலலிதா தலைமையிலான அரசு, இந்த எழுவரையும் விடுதலைசெய்து உத்தர விட்டது. எழுவரும் 24 ஆண்டுகள் சிறையில் இருப்பதால், விடுதலை செய்வது என்ற முடிவை தமிழ்நாடு அரசு எடுத்தது. அது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட உத்தரவு. மூன்று நாட்களில் எழுவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும், அந்தத் தகவலை மத்திய அரசுக்குத் தெரிவிப்பதாகவும் அதில் கூறப்பட்டிருந்தது.

மத்தியப் புலனாய்வுத் துறை புலனாய்வு செய்த வழக்குகளில் தண்டனை பெற்ற எவரையேனும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் விடுதலை செய்ய எந்த மாநில அரசு முடிவெடுத்தாலும் அது பற்றி மத்திய அரசிடம் சம்பந்தப்பட்ட மாநில அரசு ஆலோசனை செய்ய வேண்டும் என்கிறது குற்றவியல் நடைமுறைச் சட்டம். அதன்படி தகவல் அளிப்பதாக தமிழ்நாடு அரசு தெரிவித்தது.

அப்போது மத்தியில் ஆட்சிசெய்த காங்கிரஸ் அரசு, தமிழ்நாடு அரசின் மேற்சொன்ன பிப்ரவரி 19, 2014 தேதியிட்ட உத்தரவை எதிர்த்து உடனடியாக உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, எழுவரின் விடுதலைக்குத் தடை பெற்றது. மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு தடை வழங்கியது.

மத்திய - மாநில அரசுகளின் அதிகாரம் பற்றிய முக்கிய பிரச்சினை இந்த வழக்கில் எழுவதால், இந்த வழக்கை ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசமைப்பு அமர்வு விசாரிக்கப் பரிந்துரை செய்து ஏப்ரல் 25 அன்று உத்தரவை வழங்கியது மூவர் அமர்வு. ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசமைப்பு அமர்வு, நீண்ட விவாதங்களுக்குப் பின் டிசம்பர் 2, 2015இல் தீர்ப்பு வழங்கியது. ஐந்து நீதிபதிகள் அமர்வில் வழக்கை நடத்தியது, தற்போது மத்தியில் ஆட்சிசெய்யும் பாஜக அரசு.

“மத்திய அரசின் புலனாய்வுத் துறை புலனாய்வு செய்த வழக்கில் தண்டனை பெற்ற எவரையேனும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் விடுவிக்க சம்மந்தப்பட்ட மாநில அரசு முடிவெடுக்கும்போது மத்திய அரசின் ஒப்புதலை பெற வேண்டும்'' என்று கூறியது அந்தத் தீர்ப்பு. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் உள்ள ‘ஆலோசனை’ (கன்சல்டேஷன்) என்பதற்கு ‘ஒப்புதல்’ (கன்கரன்ஸ்) என்று வியாக்யானம் செய்தது உச்ச நீதிமன்றம்.

> **தங்கள் தீர்மானத்தை உதாசீனம் செய்யும் ஆளுநருக்கு எந்த அழுத்தமும் தர மாநில அரசும் முன்வரவில்லை. உள்ளபடியே அமைச்சரவையின் தீர்மானத்தின்படி ஆளுநர் செயல்படத் தவறியதைப் பற்றி தமிழக அரசு மக்களிடம் பேச வேண்டும். நீதி மன்றத்திலும் தமிழக அரசு வழக்குத் தொடுக்கலாம்.**

அதே டிசம்பர் 2, 2015 தீர்ப்பில், அரசமைப்புச் சட்டக் கூறு 161 வழங்கும் இறையாண்மை அதிகாரத்தின்படி, மாநில அரசு சிறையில் இருக்கும் எவரையேனும் விடுதலைசெய்ய முடிவெடுத்தால், அப்போது மத்திய அரசின் ஒப்புதல் தேவையில்லை என்று தெளிவாகவும் ஆணித்தரமாகவும் ஐந்து நீதிபதிகள் அமர்வு கூறியுள்ளது. அப்போது ஆட்சியில் இருந்த ஜெயலலிதா, அத்தீர்ப்பின்படி அரசமைப்புச் சட்டக் கூறு 161 வழங்கும் இறையாண்மை அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்த எழுவரை விடுவிக்கத் தீர்மானம் இயற்றவில்லை. எனவே, எழுவரின் விடுதலை நிகழவில்லை.

ஜெயலலிதா செய்யாததை, எடப்பாடி பழனிசாமி செய்தார். எடப்பாடி தலைமையிலான அமைச்சரவை செப்டம்பர் 9, 2018 அன்று எழுவரை விடுதலைசெய்வது என்ற முடிவெடுத்து, அதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியது. அத்தீர்மானத்தின்படி விடுதலை செய்ய ஆளுநருக்குப் பரிந்துரைசெய்தது. ஆனால், அத்தீர்மானம் கிணற்றில் போட்ட கல்லாக உள்ளது. அமைச்சரவையின் பரிந்துரையின்படி எழுவரை விடுவித்து, ஆளுநர் உத்தரவேதும் போடவில்லை.

தங்கள் தீர்மானத்தை உதாசீனம் செய்யும் ஆளுநருக்கு எந்த அழுத்தமும் தர மாநில அரசும் முன்வரவில்லை. உள்ளபடியே அமைச்சரவையின் தீர்மானத்தின்படி ஆளுநர் செயல்படத் தவறியதைப் பற்றி தமிழக அரசு மக்களிடம் பேச வேண்டும். நீதிமன்றத்திலும் தமிழக அரசு வழக்குத் தொடுக்கலாம்.

குடியுரிமைச் சட்டத் திருத்தத்தை எதிர்த்து, கேரள அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளது. தேசியப் புலனாய்வுச் சட்டத்தின் கீழ் மாநில அரசின் சம்மதமின்றி, குற்ற வழக்கின் புலனாய்வை தேசியப் புலனாய்வு முகாமைக்கு மாற்றுவதை எதிர்த்து சத்தீஸ்கர் மாநில அரசும் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளது. இதுபோல தமிழ்நாடு அரசும், உச்ச நீதிமன்றம் செல்வதாக அறிவித்தாலே போதும்... ஆளுநர் வழிக்கு வருவார்.

இதே போல, ‘நீட்’ தேர்வு விலக்குச் சட்டத்தை தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றி னாலும், அதற்கு மத்திய அரசு ஒப்புதல் தரவில்லை என்பதை இங்கே நினைவூட்ட வேண்டியிருக்கிறது. இதை எதிர்த்தும் உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கேதும் தொடுக்கவில்லை. இது மக்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. உண்மையாகவே முழு மனதுடன்தான் தமிழக அரசு இத்தகு முயற்சிகளை மேற்கொள்கிறதா அல்லது மத்திய அரசுடன் சேர்ந்து மாநில அரசு நடத்தும் நாடகமோ என்று யோசிக்க வைக்கிறது.

தண்டனை பெற்று சிறையில் இருக்கும் எவரையும், கூறு 72இன் கீழ் குடியரசுத் தலைவரும், கூறு 161இன் கீழ் மாநில ஆளுநரும் விடுவிக்கும் அதிகாரத்தை அரசமைப்புச் சட்டம் வழங்குகிறது. மத்திய அரசின் பரிந்துரை இன்றி, குடியரசுத் தலைவர் அரசமைப்புச் சட்டம் பிரிவு 72இன் கீழ் எவரையும் விடுதலை செய்து உத்தர விட முடியாது. அதேபோல, மாநில அரசின் பரிந்துரை இன்றி ஆளுநர் எவரையும் விடுதலை செய்து உத்தரவிட முடியாது. இதுவே சட்ட நிலை. மத்திய/மாநில அரசின் பரிந்துரையின் படியே குடியரசுத் தலைவர்/ஆளுநர் செயல்பட வேண்டும் என்பதே, நமது அரசமைப்புச் சட்டம் கூறுவது.

1999இல் தமிழ்நாட்டில் கருணாநிதி முதல்வராக இருந்தார். அப்போது ஆளுநராக இருந்தவர் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி பாத்திமா பீவி. அவர் உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றிய போது, கருணை மனுவின் மீது முடிவெடுக்கும் அதிகாரம் மத்திய/மாநில அரசுகளுக்குத்தான் உண்டு என்றும், குடியரசுத் தலைவரோ/ஆளுநரோ முடிவெடுக்க முடியாது என்றும் தீர்ப்பளித்திருந்தார்.

ஆனால், தான் அளித்த தீர்ப்புக்கே மாறாக, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்களின் கருணை மனுவை, தமிழ்நாடு அரசின் அமைச்சரவை பரிந்துரையின்றி நிராகரித்து, அக்டோபர் 29, 1999இல் உத்தர விட்டார். ஆளுநரின் அந்தத் தீர்ப்பை, சென்னை உயர்நீதிமன்றம் நவம்பர் 25, 1999 அன்று வழங்கிய தீர்ப்பில் இரத்து செய்தது. தமிழக அமைச்சரவை கருணை மனுவின் மேல் முடிவெடுக்க வேண்டும் என்றும், அதன் அடிப்படையில் ஆளுநர் கருணை மனுவின் மேல் உத்தர விட வேண்டும் என்றும் அத்தீர்ப்பில் கூறியது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற அமர்வுக்குத் தலைமையேற்ற நீதிபதி கே.டி.தாமஸ், நீண்ட காலம் சிறையில் இருந்து விட்டதையும் அவ்வழக்கின் புலன் விசாரணையில் குறைபாடுகள் உள்ளதையும் கருத்தில் கொண்டு எழுவரையும் விடுவிக்கலாம் என்று கருத்துத் தெரிவித்தார். சோனியா காந்திக்கும் இது பற்றி கடிதம் எழுதி, எழுவரையும் விடுவிக்கக் கோர வேண்டும் என்றார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் புலனாய்வு அதிகாரியாகச் செயல்பட்ட ரகோத்தமன், இவ்வழக்கு பற்றி எழுதிய புத்தகத்தில் புலனாய்வில் பல குறைபாடுகள் இருந்தன என்று சுட்டிக் காட்டியுள்ளார். தொலைக்காட்சி ஒன்றில் விவாதத்தில் பங்கேற்ற அவர், எழுவரும் நீண்ட காலமாகச் சிறையில் இருப்பதால், அவர்களை விடுவித்துவிடலாம் என்றார். இந்த வழக்கில் குற்றவாளிகளின் வாக்குமூலங்களைப் பதிவு செய்த மற்றொரு புலனாய்வு அதிகாரி தியாகராசன், வாக்குமூலங்கள் சரியானபடி பதிவு செய்யப்படவில்லை என்று உச்ச நீதிமன்றத்திலேயே மனு தாக்கல்செய்தார். மேற்சொன்ன அனைத்தும், இந்த எழுவரும் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று சொல்லுவன அல்ல; மாறாக, இவை தண்டனையைக் குறைப்பதற்கான மன்னிப்பதற்கான நியாயங்கள். 29 ஆண்டு சிறைக்குப் பின் இப்போது விடுதலை செய்வதற்கான வலுவான காரணிகள்.

இது போன்ற எந்த ஒரு காரணியுமின்றி, காந்தியை படுகொலை செய்ததற்காக ஆயுள் தண்டனை பெற்ற மூவரை - கோபால் கோட்சே, விஷ்ணு கார்கரே, மதன்லால் பாவா - 16 ஆண்டுகள் மட்டுமே சிறையில் இருந்தது போதுமென அக்டோபர் 13, 1964இல் பிரதமர் நேரு மறைந்த 5 மாதங்களில் விடுதலை செய்தது காங்கிரஸ் அரசு.

இப்போதைய பாஜக அரசு, பஞ்சாப் மாநிலத்தை ஆளும் காங்கிரஸ் மற்றும் பாஜக கூட்டணியில் உள்ள அகாலிதளத்தின் கோரிக்கையை ஏற்று காலிஸ்தான் கோரி ஆயுதமேந்திப் போராடியதற்காக ஆயுள் தண்டனை பெற்ற 8 பேரை குருநானக்கின் 550ஆவது பிறந்த தினத்தையொட்டி விடுதலை செய்தது. இதே அணுகுமுறையை எழுவர் விடுதலையிலும் பின்பற்றுவதற்கு மத்திய பாஜக அரசு மறுப்பது சரியல்ல. தமிழக அமைச்சரவை முடிவெடுத்த பின்னரும், எழுவரை விடுதலை செய்ய ஆளுநர் உத்தரவிடத் தவறியது அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானது. ஆகவே, எழுவரை விடுவிப்பதற்கான அழுத்தங்களை அதிமுக அரசு உண்டாக்க வேண்டும்!

நன்றி : தமிழ் இந்து

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கழகத் தலைமை நிலையத்தில் ‘மாதவி’ குறும்படம் திரையிட்டு - விவாதம்



திராவிடர் விடுதலைக் கழகம் தலைமை அலுவலகத்தில் 22.02.2020 அன்று மாலை 5:30 மணியளவில் ‘மாதவி’ குறும்படம் திரையிடப்பட்டது. தென் சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி வரவேற்புரை யாற்றினார். தொடர்ந்து படக் குழுவினர் அறிமுகம் நடைபெற்றது. அதன்பின் கலந்துரையாடல் தொடங்கியது.

குறும்படத்தைப் பற்றி ஆழமான விவாதங்களை ஒவ்வொருவரின் பார்வையிலும் கலந்து கொண்ட தோழர்கள் கேள்விகள் எழுப்பியும், பாராட்டுக்களைத் தெரிவித்தும் குறும்படத்தைப் பற்றிய கருத்துக்களை பரிமாறினர்.

சிறப்பு விருந்தினர்களான, ஊடகவியலாளர் ஜீவசகாப்தன், மனித உரிமை செயல்பாட்டாளர் தேவநேயன், நக்கீரன் வலைதளப் பொறுப்பாளர் பிலிப்ஸ், மனிதி செல்வி, தமிழ்நாடு அறிவியல் மன்றம் ஆசிரியர் சிவகாமி, பேராசிரியர் சரசுவதி, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் தோழர்களின் கருத்து பரிமாற்றங்களுக்கு இடையில் சிறப்புரையாற்றினர்.

விரட்டு கலை பண்பாட்டு மையம் ஒருங்கிணைப்பாளர் ஆனந்த் நிகழ்வினை தொகுத்து வழங்கினார். குறும்படம் திரையிடல், திராவிடர் விடுதலைக் கழகம் மற்றும் விரட்டு கலை பண்பாட்டு மையத்தால் ஒருங்கிணைக்கப்பட்டது.

படத்துக்கான உரையாடலை எழுதியவர் வடசென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகச் செயலாளர் ராஜீ, இயக்கியவர் - அவரது வாழ்க்கை இணையரும் இயக்குனருமான சாரதி. படக்குழுவினரை இயக்குனர் சாரதி அறிமுகப்படுத்தினார். தி.வி.க. விரட்டு கலை பண்பாட்டு மய்யத்தின் சார்பில் படத் தொகுப்பு - தியாகு; ஒளிப்பதிவாளர் - சுரேஸ் குமார்; இசை - டி.எம். உதயகுமார்; வடிவமைப்பாளர் - அருண்குமார்; இயக்கம் - சாரதி; எழுத்து - ராஜீ ஆகியோருக்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. ஏராளமான தோழர்கள் விழாவிற்கு வந்திருந்ததோடு விவாதங்களிலும் பங்கேற்றனர்.

# குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு எதிரான – மக்கள் திரள் போராட்டத்துக்கு கழகம் ஆதரவு




டெல்லியின் ஷாயின்பாக் பகுதியில் குடியுரிமை திருத்தச் சட்டம் - குடியுரிமை தேசியப் பதிவேடு - குடியுரிமை மக்கள் தொகைப் பதிவு சட்டங்களை எதிர்த்து தொடர் போராட்டங்கள் நடந்து வருகின்றன. அதேபோல் சென்னை வண்ணாரப்பேட்டை பகுதியில் கண்ணன் ரவுண்டானா பகுதியில் 10 நாட்களாக இரவு பகலாக தொடர் போராட்டம் நடந்து வருகிறது. பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வருகிறார்கள். பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த பொறுப்பாளர்கள் ஆதரவு தெரிவித்து பேசி வருகிறார்கள். ஆண்களைவிட இஸ்லாமிய பெண்கள் பெருமளவில் பங்கேற்பது இந்தப் போராட்டத்தின் தனிச் சிறப்பாகும். காவல்துறை அமைதியாகப் போராடிய மக்கள் மீது திடீரென தடியடி நடத்தி வன்முறையால் போராட்டத்தைக் கலைக்க முயற்சித்தது. அதற்குப் பிறகுதான் போராட்டம் குறித்த செய்தியை ஊடகங்களே வெளியிடத் தொடங்கின. தடியடிக்குப் பிறகு போராட்டம் தமிழ்நாடு முழுதும் மேலும் விரிவடைந்தது. வண்ணாரப்பேட்டை போராட்டக் களம் மேலும் சூடு பிடிக்கத் தொடங்கியது. போராட்டத்தைத் தடை செய்ய ‘சங்கிகள்’ நீதிமன்றத்தை அணுகினர். போராடும் உரிமையை உறுதி செய்த உயர்நீதிமன்றம் போக்குவரத்துக்கு இடையூறின்றி போராட்டம் நடத்த அறிவுறுத்தியது. போராட்டக் குழுவினரே போக்குவரத்துக்கு இடையூறு இன்றி வாகனங்கள் போக்குவரத்தை கட்டுப்பாடாக ஒழுங்குபடுத்தி வருகின்றனர்.

பிப். 23 அன்று மாலை போராடும் மக்களுக்கு ஆதரவு தெரிவிக்க சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் வண்ணாரப்பேட்டைக்கு சென்றனர். பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், போராட்டத்தின் நியாயங்களை விளக்கிப் பேசினார். குடியுரிமை திருத்தச் சட்டங்களுக்கு எதிராக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரைகளடங்கிய நூல்களை தோழர்கள் விற்பனை செய்தனர். சில மணி நேரங்களிலேயே கொண்டு சென்ற அனைத்து நூல்களும் விற்றுத் தீர்ந்தன.

நமது செய்தியாளர்

# உலகத் தாய்மொழி நாள் – ஈரோடு பொதுக்கூட்டம்

21.02.2020 அன்று உலகத் தாய் மொழி நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு, வடக்கு மற்றும் நாமக்கல் மாவட்ட கழகங்கள் ஒருங்கிணைப்பில் 23.02.2020 அன்று ஈரோடு திருநகர் காலனி பகுதியில் மாநில அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது,

நிகழ்வின் தொடக்கத்தில் தோழர் சித்திக், தமுமுக மாவட்டத் தலைவர் வரவேற்புரை ஆற்றினார். தொடர்ச்சியாக இணைய தள பொறுப்பாளர் விஜய்குமார், நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் முத்து பாண்டி குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராக சிற்றுரை ஆற்றினர்.

அடுத்ததாக ‘நாடு எங்கே போய்க் கொண்டுள்ளது‘ என்ற தலைப்பில் புதுகை பூபாளம் குழுவினர் பல்வேறு பகுத்தறிவு கருத்துக்களையும், குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிரான கருத்துக்களையும் காண்பவர் கேட்பவர் மகிழ்ந்து பின் சிந்திக்கும் வண்ணம் 1.30 மணி நேரத்திற்கும் மேலாக பாடல், இசையோடு கலை நிகழ்ச்சி நடத்தினர். மக்கள் அனைவரும் ஆரவாரமிட்டு, கைத்தட்டி உற்சாகப்படுத்தி மகிழ்ந்து செவிமடுத்தனர்

கழகத் தலைவர் அவர்களின் குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிரான உரையை ‘இந்திய நாட்டினருக்கும் எதிரானது தான் குடியுரிமைத் திருத்தச் சட்டம்‘ என்ற புத்தகத்தை கஸ்தூரி (மாவட்ட ஊராட்சிக் கவுன்சிலர்) அறிமுகப் படுத்தினார். மேலும் கழகப் பொதுச் செயலாளரின் உரையான ‘குடியுரிமைச் சட்டங்களை ஏன் எதிர்க்கிறோம்’ என்ற புத்தகத்தை ரியா (கருவேப்பம் பட்டி ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர்) அறிமுகப்படுத்தினார்.

தொடர்ந்து மனிதநேய மக்கள் கட்சி மாநில அமைப்பு செயலாளர் காஞ்சி ஜெய்னுலாப்தீன், அஸ்ஸாம் உயர்நீதிமன்றத்தில் தற்போது வெளியாகியுள்ள ஜுபைதா பேகத்தின் குடியுரிமை வழக்கினை எடுத்துக் கூறி பல்வேறு சான்றிதழ்களை தாக்கல் செய்த போதும் குடியுரிமை மறுக்கப் பட்டுள்ளதை விளக்கி, இந்த திருத்தச் சட்டம் எவ்வாறெல்லாம் இந்த நாட்டின் குடிமக்களை அலைகழிக்கிறது என்பதை எடுத்துரைத்தார்.

இறுதியாக கழகத் தலைவர் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் பல்வேறு இன்னல்களை எடுத்துக் கூறினார்.

குறிப்பாக அசாம் உயர்நீதி மன்றத்தில் பிப்ரவரி,12 ஆம் தேதி வந்த ஒரு தீர்ப்பில், முனீந்திர பிஸ்வாஸ் என்கின்ற இந்துக்கு குடியரிமை இல்லை என்று தீர்ப்பில் சொல்கிறார்கள். அவர் அப்பா இந்திர மோகன் பிஸ்வாஸ் இராணுவத்தில் பணியாற்றியவர். அவருடைய தாத்தா துர்கா சரண் பிஸ்வாஸ், அவரும் இராணுவத்தில் பணியாற்றியவர். இராணுவத்தில் பணியாற்றியவரின் பேரனுக்கு குடியுரிமை இல்லையென்று கூறிவிட்டார்கள். நிராகரித்து விட்டார்கள்.

குடியுரிமை மறுக்கப்படுவது இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல அனைத்து தரப்பு மக்களுக்கும் இதன் ஆபத்து உள்ளது என்று எடுத்துரைத்து அனைவரும் போராட்டக் களத்திற்கு வருமாறு வேண்டுகோள் விடுத்தார்




நடந்து முடிந்த உள்ளாட்சி தேர்தலில் வெற்றி பெற்ற திருநங்கை ரியாவுக்கு பயனாடை அணிவித்து கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதிய ‘திராவிட பெரியார் யாருக்கு எதிரி?’ என்ற புத்தகம் பரிசளிக்கப்பட்டது.

ஈரோடு மாவட்ட செயலாளர் எழில் சுந்தரம் நன்றியுரை நவின்றார்.

நிகழ்வில் நிமிர்வோம் மற்றும் பெரியார் முழக்க சந்தாவினை 20 நபர்களுக்கு 10,000 ரூபாய் கழகத் தலைவரிடம் ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் வேணுகோபால் வழங்கினார்.

பெரும் எழுச்சியோடு நடந்த நிகழ்விற்கு ஈரோடு வடக்கு, தெற்கு, மற்றும் நாமக்கல் மாவட்ட தோழர்கள் வந்திருந்தனர்.

செய்தி: விஜய்குமார்

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
சிந்தாமணி சில்க்ஸ்
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர்
& மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.chinthamanisilks.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 27th February 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN